உ

சிவமயம்.

# திருக்கருகாவூர்
# முல்லைவனநாதர்
# நான்மணிமாலை.
# கரும்பனையநாயகி
# இரட்டைமணிமாலை.

---

இவை

தஞ்சைமாநகரம்

ந-வீரபத்திரபிள்ளையால்

இயற்றப்பட்டு.

---

சதாவதானம்.

சுப்பிரமணியஐயரது

வித்தியாவர்த்தனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னபட்டணம்.

விஷு-வருஷ புரட்டாசிமீ.

சிவமயம்.

திருக்கருகாவூர்

முல்லைவனநாதர்

# நான்மணிமாலை.

## காப்பு.

நேரிசைவெண்பா.

சீர்பூத்த செல்வத் திருக்கருகா வூர்வாழும்
வார்பூத்த முல்லை வனநாதர்—பேர்பூத்த
நான்மணிப்பா மாலைசொல நற்றுணையா மைங்கரத்தன்
வான்மணிப்பொற் பாத மலர்.

## நூல்.

நேரிசைவெண்பா.

பூமேவு நான்முகனும் பொன்மேவு மார்பினனும்
மாமேவு மேனிலத்து மாநிலத்தும்—தாமேவி
நண்ணரிய முல்லைவன நாதனடிப் போதினிதம்
எண்ணமுளார்க் கின்பே யிடம். (க)

கட்டளைக்கலித்துறை.

[பொன்
இடங்கொண்ட வண்ட மெலாமீன்றுங்கன்னி யெனத்திகழ்
வடங்கொண்ட கொங்கைக் கரும்பனையாளை மருங்கிலுறுந்
திடங்கொண்ட முல்லை வனநாதன் றாட்டுதி செய்யவல்லார்
மடங்கொண்ட நெஞ்சரை நன்னெஞ்ச ராக்கிட வல்லவரே. ()

## விருத்தம்.

வல்லைவகை யிலக்கணந்தேர் விற்பனரும் விப்பிரரும் வழுத்துந்தூய, முல்லைவனத் துள்ளுறையு முக்கணுடைக் கற்பகமே முரண்சாலம்பொறற், கல்லைவளைவில்லாக்கிக் கருதலர்முப் புரங்கடிதிற் கடிந்தோய்மாயைத், தொல்லைவினை யிருள்கெட மெய் யருண்ஞானவிளக்கிடுவாய் தொண்டனெற்கே. (௯)

## அகவற்பா.

தொண்டனைப்புரக்கமுன் மண்டலைசுமந்தாய்
பிண்டமும்பொருந்தப் பிரம்படியுற்றாய்
பாதம்வருந்தத் தூதெனச்சென்றாய்
நல்லடிமுடிக்கண் கல்லடிபொறுத்தாய்
தலைவிறகெடுத்து விலைபலவறைந்தாய்
படிமிசைவீழ்ந்துவில் லடியையும்விழைந்தாய்
தூவணத்தண்ணீர்க் காவணமமைத்தாய்
மதிசேருச்சியிற் பொதிசோறெடுத்தாய்
பன்றியின்சேய்க்குப் பான்முலைகொடுத்தாய்
தாயாய்ச்சூன்முதிர் தையலைக்காத்தாய்
மாமனுய்வணிகர்சேய் வழக்கெடுத்துரைத்தாய்
இன்னமும்பற்பல சின்னமுமடைந்தாய்
அவ்வணமெற்கா மெய்வருந்தாதின்
றெவ்வண்மேனுநா னுய்வணங்காட்டாய்
மருக்கமழ்நந்தன வனஞ்சூழ்
திருக்கருகாபுரிச் சிவபெருமானே. (௰)

## நேரிசைவெண்பா.

மானயந்தன் றூழிக்கா மாமலர்க்க ணிற்கணிந்தான்
தேனயந்த முல்லைவனச் செம்மலே—யானயத்தல்
நின்னிருதா ளல்லான்முன் னீருடுத்த தாரணிக்குள்
அன்னியமொன் றில்லை யறி. (௧௧)

## கட்டளைக்கலித்துறை.

அறியாருணர்வில ராற்றிடுந்திங்கை யயலெனவுட்
குறியாருலகி லொருதேவையுஞ்சற் குணத்தர்குழாம்

பிறியாருடம்பினைப் பேணார்விசும்பிற் பிறங்கியெழும்
வெறியாரு முல்லை வனநாதன் மெய்யருள் வேட்டவரே. (௪)

### விருத்தம்.

வரந்தருவாய்முல்லைவன நாதாநின்றாண் மலர்த்துணையுமுழு
வையுரி மருங்குமோங்கும், உரந்தருமால்விடையுமுமை யோர்
பாற்றன்னு முருவமும்வெண்பொடியழகு மழுமானேந்துங்,
கரங்களுநூலணிமணிதாங் குரமுங்கொன்றைக் கணிப்புயமுங்
கறைமிடறுங் கண்கண்மூன்றுஞ், சுரந்தவருளேமுகமு நதி
வெண்டிங்கட் சுடர்முடியுந்தினமெணியான் சுகிக்குமாறே. ()

### அகவற்பா.

மாறாநின்னருண் மாபயோததிக்கண்
வீறுமன்பெனு மெய்க்கடங்கொடுமுகந்
தறிவெனுந்தாழியிற் பிறிவறக்காய்ச்சிச்
சேர்த்ததைத்திரட்டிநின் றோத்திரப்பாவென்
றபிதானங்கொடுத் தாரணவாகம
முற்றுணர்வுற்ற நற்றவத்தறிஞோர்
முற்பகலமைத்தன ரற்புதத்தமிழா
அந்நெறிதேர்ந்து நன்னெறிதழுவும்
நற்றிறன்மருவாச் சிற்றறிவேன்றலை
மாசுணங்கொண்டவிக் காசினிக்கண்டிகழ்
முத்தமிழுணர்ந்த வித்தகனெனநின்
றிருப்பதப்புகழை விருப்பொடுநாணின்
றியம்பவுட்டுணிந்த தென்குறித்தெனினல்
இசைவசையிரண்டுமின் னிசையெனநசையுறன்
மூதறிவோர்க்கியல் பாதலினன்னோர்க்
காதிநாயகனீ யாதலினென்மொழி
சிறப்பிலதேனுநின் றிருப்பெயருறலாற்
றிருவுளமகிழ்ந்தின் பருள்வையென்றெணியே
நீர்வளநிலவள மேர்பெறவிளங்கும்
மகிமைசான்முல்லை வனநகர்
மகிபனாயெண்குண மன்னிவாழ்வோயே. (௮)

வெண்பா.

வாழ்வரக்கு முல்லை வனநாதன் சன்னிதியிற்
றாழ்வாருக் கில்லை சகத்திலினி—யூழ்வாய்ப்பக்
கஞ்சமல ரோனமைக்குங் கற்பனையுந் தென்றிசைவாழ்
வெஞ்சமனுக் கஞ்சுதலு மே. (௯)

கட்டளைக்கலித்துறை.

மேகம் பொழியுந் திருக்கரு காபுரி மேவுமதி
நாகம் பொதிநெடுங் கோபுர நாதவிந் நாட்டெழிமுத்
தாகம் பொலியு மனத்தேனை நின்னுப சாந்தகுண
போகம் பொருந்து மறிவாள னுக்கும் பொறுப்புனக்கே.(௧௦)

விருத்தம். [யேன்

உன்க்குநேரொரு தெய்வமின்றெனக்குறித் துன்கழற்றொழுநா
றனக்குநேர்ந்தரு டந்திடாதிருத்தனின் றகவினுக்குரித்தன்றே
நினைக்குநேயர்நெஞ் சகத்திருமலர்த்தடநிரம்பியசெழுந்தேனே
கனக்குநேர்மறை யோருறைதிருக்கரு காபுரிப்பெருமானே·()

அகவற்பா.

மானிலஞ்சலில மருத்தங்காரகன்
வானிலங்கிரவி மதியியமானன்
ஆகுமெண்வகையோ டகிலமாம்புவன
போகமுங்காட்டிப் போக்கிடவல்ல
சித்தனுயோங்குந் திருக்கருகாபுரத்
தத்தனேநடுவீ றுதியுமருவாச்
சிற்பரம்பொருளே தெய்வநாயகனே
அற்புதாநந்த வருட்சுடர்மணியே
நித்தனேநிமலா நிற்குணாகரனே
முத்தனேயாதி முதல்வனேயுனது
திருவருளென்னுஞ் செழுஞ்சுகோததிக்கணின்
ஞருகரத்தங்குலி யொன்றினுற்றொட்டுச்
சீர்பெறவென்பா லோர்துளிதெளிக்கின்
நேர்படவருந்தியென் னெஞ்சகங்குளிர்ந்தே
இம்மையேயிருவினை யென்னும்
வெம்மைதீர்ந்தென்றும் விளங்குவனுவந்தே. (௧௨)

### நேரிசைவெண்பா.

விளங்ககிலா காமுநின் மேனியென நாடிக்
களங்கமற வெக்காலுங் காண்பேன் — துளங்கெழுநா
வண்ணா மதிநிதியோர் வாழ்கருகா வூருறைமுக்
கண்ணா மதிசே கரா. (௧௫)

### கட்டளைக்கலித்துறை.

கரஞ்சேர்த் திருவிழிக் கண்ணீர் ததும்பக் கருத்துருகி [ம்பிற்
உரஞ்சேர்ந் துனைப்பணிந் துய்யவைப் பாயெனை யொண்விசு
றிரஞ்சேர்ந்த கன்னலுஞ் சென்னெலு மோங்குந் திருக்கருகா
புரஞ்சேர்ந் திலங்கு மிறைவா சதாநந்த புண்ணியனே. (௧௪)

### விருத்தம்.

புண்ணாட்லகமென் றெண்ணிவெண்டேரிற் புனலெனா
ஞ்சகத்திடையழுந்தி, எண்ணருங்கடங்க ளெடுத்தெடுத்திளைத்
த வேழையேற்கிரங்கிமெய்யறிஞர், கண்ணுறநின்சீர் வழுத்தி
டப்புரிந்த கருணையென்னென்றெடுத் துரைப்பேன், விண்ணு
றுவிரையார்முல்லைமாவனத்தில்வெள்விடைமேல்வரும்பரனே.

### அகவற்பா.

மேல்வரும்பவமற வேண்டிடின்வேண்டுமின்
சேல்வரும்பணைசூழ் திருக்கருகாபுரத்
தத்தனம்புயத்தா ளன்பொடு
நித்தமும்போற்றி நிற்குமெய்ப்பணியே. (௧௬)

### நேரிசைவெண்பா.

நிற்குமிடம் வானோ நிகமா கமமுடிவோ
சற்குணர்தந் நெஞ்சோ தடங்கிரியோ — வெற்குளவு
சாற்றாய் கருகாவூர்த் தாணுவே மாணுறுவெண்
ணீற்றாய் கருணையுற்று நீ. (௧௭)

### கட்டளைக்கலித்துறை.

நீதிக்கு ணின்றொரு சாண்பண்டிக் குண்டி நிரப்பவெணிற்
பேதிக்கு மென்னுளமென் செய்குவேனென்பிழைபொறுத்துப்
போதிக்கு மாற்றல னீயன்றி யாவர் புவிக்கணுளார்
மாதிக்கு ளோங்குந் திருக்கரு காபுரி வாழ்சிவனே. (௧௮)

## விருத்தம்.

சிவந்தவிருவிழிக்கியலச் செங்கையினொண்மழுத்தலைவேல் சி
னந்துகாட்டி, நிவந்தமகிடப்பரியோ னெருங்காமுன் னடியரடி
நிழற்கீழ்வைப்பாய், நவந்தருபேதங்களுமாய் ஞாலமெலாநட
ம்புரியு நாதாநாளுந், தவந்தருமந்தழைத்தோங்கும் திருக்கரு
கா புரத்துறையுந் தம்பிரானே. (௧௯)

## அகவற்பா.

தம்பிரானேக னம்பிகைபாக
னம்புலிச்சடையோன் வெம்புலியுரியோன்
செம்பொனம்பலவ னும்பர்கட்கிறையோ
னென்றேயடியார் நின்றேத்தெடுக்குநின்
னம்புயத்தாளெனுந் தம்பமீதிஞ்ஞான்
றைம்பொ றிவீதிசென் றிம்பரிற்ருவுமென்
மனமெனும்பரியை நினதருணாண் கொண்
டசைத்தாலன் றி யறியேனுய்வழி
பொருப்பிறைமகள்பால் விருப்பொடு
திருக்கருகாபுரத் திருக்குமுன்னோனே. (௨௰)

## நேரிசைவெண்பா.

முன்னோனென் றுன்னை மொழிதற் குனையல்லாற்
பின்னோர் பொருளும் பிறிதின்றே—எந்நாளும்
ஒப்பரிய முல்லைவனத் துள்ளாய்நின் றன்மையையான்
எப்பரிசிற் சொல்வே னெடுத்து. (௨௧)

## கட்டளைக்கலித்துறை.

எடுக்கா ருபய கரங்கொண் டலர்க ளிருந்தவர்பால்
அடுக்கா ருணர்வுறு நூல்பயி லாரடி யார்க்கமுது
கொடுக்கா ருவந்திவ ரொக்கால மெவ்வணங் கூடுவர்மேல்
அடுக்காரு மாடத் திருக்கரு காபுரத் தையருளே. (௨௨)

## விருத்தம்.

ஐயமெடுத்தருந்துறவோ ரருந்துவதையாய்ந்துணரா தல
ரென்றும், வையமெடுத்தியம்புமென மதித்தன்றேநீயுமுன

மலர்க்கையேந்தி, ஐயமெடுத்தயின் றனைநின் பெருங்கருணையெ
ன்புகல்கே னரிவெள்ளேற்று, வையமெடுத்திடக்கருகா புரத்
துமைகண் களிப்புறவாழ் மாசிலானே. (௨௩)

அகவற்பா.

மாசிலா மணியென் றுசினிவாசருங்
காசினிவாசரும் நேசமாப்பேசுந்
திருப்பெயருனக்கே சிறந்துளதன்றி
எனையோர்க்கிலா தென்றினிதுணர்ந்தன
னெவ்விதத்தென்னி லீரேழுலகின்
சராசரவுயிர்க்கணுஞ் சார்ந்துநின்றனைத்தையு
மிடுக்கணன்கென்னு மிருவினைநாண்கொண்
டாட்டிவித்தவைகளுக் கமுதமும்பந்தமுங்
காட்டிநீயொன்றின் மாட்டினும்பற்று
அருவாயறிவா யருளாயொளியாய்த்
தெருளாய்வெளியாய்த் திரமாய்நிறைவாய்
இருந்தறிந்தின்பா யியங்குறுமொன்றாய்
அருந்தவர்க்கன்றி யகமுளார்க்கெட்டா
நிமலமாயென்று நின்றிலங்குதலால்
விண்மருவிமையோர் கண்முனந்தோன்ற
அம்புலிமண்டலத் தப்புறமேலாய்
வற்புறநிவந்தபொன் மதில்சூழ்
பொற்புறுகருகா புரத்திறையோனே. (௨௪)

நேரிசைவெண்பா.

புரத்தையக மென்னுமயல் போக்கியுனை நோக்கும்
உரத்தையடி யேற்கெளிதி னோதாய்—கரத்தில்
மழுவேந்து முல்லைவன மன்னுநான் மண்ணில்
வழுவேந்து முன்விடைமேல் வந்து. (௨௫)

கட்டளைக்கலித்துறை.

வந்தனந்தங்கு மலர்வாவிமுல்லை வனத்தினுட்ட
வந்தனந்தன்மமுற் றோரேத்துமீசன் மலரடிக்கோர்
வந்தனந்தந்தவ ரந்தனத்தார்மயல் மாற்றிநெஞ்சு
வந்தனந்தன்பரிக் குந்தளைக்கண்சுக மன்னினரே. (௨௬)

விருத்தம்.

மன்னுமடி யர்க்கருளு மால்தி வனத்தோய்
இன்னுமுட லம்பல வெடுக்கினுமெ னுள்ளம்
உன்னுவது மைந்திய லுணர்ந்துதுதி நாவாற்
பன்னுவது நின்சரண பங்கய மிரண்டே. (உஎ)

அகவற்பா.

இரண்டறநிற்குநா ளென்நாளென்மனந்
திரண்டெழும்புகழ்சேர் திருக்கருகாபுரி
வாழுமைமுகத்து வள்ளலேவிளைவிற்
சூழ்வுறுஞ்சகத்திற் றந்தைதாய்சுற்ற
மனைவிருநிதியு மற்றவையனைத்துங்
கான்றகூழெனக் கண்டயர்ந்
தென்றுமுனைநினைந் தின்றுதிபுரிந்தே. (உஅ)

நேரிசைவெண்பா.

புரிந்தறியே னன்மை புகன்றறியே னுண்மை
இருந்தறியே னன்றோ ரிடஞ்சேர்ந்—தருந்தவர்சூழ்
முல்லைவனத் தோங்கு முதல்வனே யென்னுள்வீட்
டெல்லைவழி காண்பே னியான் (உகூ)

கட்டளைக்கலித்துறை.

யான்கண்டனனினிக் காணேன்பவப்பிணி யென்பதையிங்
கூன்கண்டமாயை யொழிந்தன்பருள்ள முவந்தமுதின்
தேன்கண்டனைய துதிபாடிநின்று தினம்பரவும்
வான்கண்டமுல்லை வனநாதன்பாத மருந்தினையே. (௩0)

விருத்தம்.

மருப்பொலி முல்லைமா வனத்திற் பங்குமை
உருப்பொதிந் துறவதிந் துலவு நாதனே
விருப்பொடு வெறுப்பினால் வினைக ளெய்தியான்
கருப்பொருந் தாவணங் கருணை செய்வையே. (௩௧)

அகவற்பா.

வையமூன் றிடனு மாநடப்புரியுந்
துய்யமெஞ்ஞானச் சுடர்வடிவாகிக்

கருகாபுரத்துறை கண்ணுதற்பெருமநின்
ஒருகாற்றூக்கிய துமைநடங்தோற்கவோ
அன்னவணின்பான் மன்னிநிற்குதலான்
மேதினிசத்தியின் விளக்கமென் றியாவரும்
ஓர்ந்திருத்தற்கோ வோர்பதமூன் றிய
நீதுகாரணமென் றிப்பொழு
தோதுதியடியேற் குற்றதையுவந்தே. (௩௨)

நேரிசைவெண்பா.

ஊற்றவத்தை மூன்றி லுழலா துணைக்காணும்
நற்றவத்தை யானெய்து நாளென்றோ—முற்றுணர்ந்தோர்
எல்லையிலாப் பேரன்போ டெஞ்ஞான்று மேத்தெடுக்கும்
முல்லைவனத் தீசா மொழி. (௩௩)

கட்டளைக்கலித்துறை.

மொழிக்குண்டு நன்னய மெய்க்குண் டமல முகிழ்க்குமிரு
விழிக்குண்டு சின்மயக் காட்சிமுன் வேதம் விளம்புமுத்தி
வழிக்குண்டு மெய்த்துணை மான்மியநாளும் வசித்திருக்கும்
உழிக்குண்டு முல்லை வனத்தீசற் கன்புசெய் யுத்தமர்க்கே. (௩௪)

விருத்தம்.

உத்திநாக முடுத்தசெழுஞ்சடை
நித்தியாநந்த நின்மலவன்பர்தஞ்
சித்தனேநற் றிருக்கருகாபுரத்
தத்தனேயெனை யாள்வதுன்பாரமே. (௩௫)

அகவற்பா.

பாரொடுவிண்ணாய்ப் பரந்தவெம்பரனெனு
மோருரையோர்ந்துன துண்மையையுணரா
தாசைவெறுப்பி லகமலைந்துண்மை
காசினியான்சடங் கர்த்தபோக்தாநா
னன்னியமியானீ யகஞ்சிவமாகே
னென்னுமம்பிரமை யெய்தியெய்ப்புறச்செயு
மிப்பெரும்பிணிநின் மெய்ப்படுமருண் மருந்
தன்றியொன்றானும் பொன்றிடுநெறியார்

கலிவளையுலகிற் காண்கிலன்
பொலிதிருக்கருகா புரத்திலுள்ளானே. (௩௬)

நேரிசைவெண்பா.

உள்ளமயக் காலுலகை யுள்ளதெனக் கொண்டயருங்
கள்ளமற நிற்கக் கருணையொடு—வெள்ளமலி
வேணியா முல்லைவனம் வீற்றிருக்கு முத்தலைவேற்
பாணியா வென்னைமுகம் பார். (௩௭)

கட்டளைக்கலித்துறை.

பாரம்பரம்பணி செய்கருகாபுரிப் பாற்றிசையெண்
சேரம்பரம்பணிப் பூண்பூண்டமுக்கட் செழுஞ்சுடணா
நேரம்பரம்பணி யொத்துன்னுவாய்மன னேநெருங்கிக்
காரம்பரம்பணிந் தாங்கேறுமாயக் கருளறவே. (௩௮)

விருத்தம்.

கருணைபெறுசாபானுக் கிரகம்பூண்ட கவுதமர்முன்னிருடி
கள்செய் மாயக்கோவைச், சரவணத்தினோர் துரும்பா லுடலிற்
றீண்டத் தரைமேல்வீழ்ந்திறந்தபழி யன்னோர்க்கன்னாள், மரு
வியதைத்தவிர்த்தாண்ட புகழ்சேர்முல்லை வனத்திறையோன் றி
ருவருளை மன்னினோருக், கிருவினைவாரிதிவாவி முத்திதீரத் தே
றுவதற்கிடையூறிங் கெவர்செய்வாரோ. (௩௯)

அகவற்பா.

செய்யமாதவர்சூழ் திருக்கருகாபுரத்
தையனேசிறியே னாணவமாதி
மும்மலந்தீர்ந்து மூதறிவார்ந்துன்
செம்மைசேரடியார் திரளொடுங்கூடக்
கருத்துகந்தென்சே கரத்திற்
றரிக்கவைகின்றாட் டாமரைப்பூவே. (௪0)

நான்மணிமாலை முற்றிற்று.

சிவமயம்.

## கரும்பனையநாயகி

# இரட்டைமணிமாலை.

### காப்பு.

நேரிசைவெண்பா.

ஓதுந் திருக்கருகா வூர்வாழ் கரும்பனைய
மாதுக் கிரட்டைமணி மாலைசொலற்—காதரவாந்
திக்கணுடை யானைமுகச் செம்மலரு ளாற்பயந்த
முக்கணுடை யானை முகன்.

## நூல்.

நேரிசைவெண்பா.

சீரோங்குங் கல்வித் திறனோங்குஞ் செய்யவருட்
பேரோங்கு மோங்குமெழிற் பேரின்பம்—பாரோர்
விரும்பனையாய் முல்லைவனம் வீற்றிருக்கு முக்கட்
கரும்பனையாட் கன்புசெய்தக் கால். (க)

கட்டளைக்கலித்துறை.

காலங் கடந்தமெய்க் காட்சிய தாய்க்கரு காபுரியின்
பாலங் கரும்பனை யாளாகி நின்றநின் பண்புரைக்கும் [சார்த்
மேலங்கப்போர்வைகொ ளென்னைநின்சேயென வேண்டிடிற்
றாலங் கயங்களின் போர்வையன் மாறு சொலற்கிலையே. (உ)

சொல்லற் கரும்புகழ்சேர் தாய்முல்லைக் கானுறையும்
மல்லற் கரும்பனைய மங்கையே—அல்லற்
கெனையாளாச் செய்யாம லெஞ்ஞான்று நின்னை
நினையாளாச் செய்ய நினை. (௩)

[நித்தமன்பாற்
நினைந்தார்க்குந் தொண்டிற் றுணிந்தார்க்கும் பாத்தொடை
புனைந்தார்க்கும்வல்லிற்புலப்படத்தோன்றுமுன்பொன்மருமன்
முனைந்தாழக் கீண்டும் பெறற்கரி தாய முகிழ்மலர்த்தேன்
நனைந்தாரு முல்லை வனத்தீசன் பங்கின ணற்பதமே. (௪)

பதத்தா னமற்காய்ந்தோன் பக்கலுறப் பெற்ற
இதத்தா லெனைமறவா தின்றற்—புதக்கருகா
வூர்வாழ் கரும்பனைய வுத்தமியே நித்தமுநின்
சீர்வாழ்த்தும் வாழ்வருளிச் செய். (௫)

செய்வாய்ந்த முல்லை வனத்தன்ப ரேத்தச் சிறந்துலவும்
மைவாய்ந்த முக்கட் கரும்பனை யாயுனை வாழ்த்தவெற்கோர்
மெய்வாய்ந்து நின்னருண் மெய்வாய்ந்தி டாதிவ் வியன்புவிமேற்
பொய்வாய்ந்து நிற்கி லடியேற்கு நிற்கும் புகழிலையே. (௬)

புகலிடநின் கோகனகப் பூஞ்சரணல் லாதொன்
றகலிடத்தி லேதி லறியேன்—இகலிலதாய்
மன்னுங் கருகாவூர் மாதுமையே யென்பாணீ
இன்னுங் கருணைவையா தென். (௭)

என்னுரைப் பேன்கரு காபுரித் தேவிநின் னேற்றமியான்
பொன்னுரைப் பாள்கலை மின்னுரைப் பாளம் புரிவனத்தா
மன்னுரைப் பான்பிரமன்னுரைப்பானென்னல்வாய்மையன்றுன்
றன்னுரைப் பான்மகிழ் பெம்மா னுரைசெயத் தக்கதுவே. ()

தக்கபுசிப் பன்றிச் சடம்பருக்க நாடியயற்
இருக்குடலூ னுண்பார்க்குத் தோன்றுமோ—மிக்க

திருக்கருகா வூருமையாள் சிட்டர்பணி செய்யன்
பருக்கருகா முத்திப் பதி. (௰)

முத்திக்கு நேர்வழி யீதென்று நாடிநன் முல்லைவனத்
தெத்திக்கு ளோரும்வந் தஞ்சலித் தேத்த விலங்குமையே
சத்திக் குமாரியென் றோர்நாம நிற்குள தன்மையையோர்ந்
தித்திக்கு ளென்னையு மீடேற்ற வல்லையென் றெண்ணினனே.

எண்ணியுளத் தாற்றிநித மென்மனவாக் கங்கமிவை
நண்ணியுனை யுன்றுதியை நற்பணியைத்—தண்ணுறவை
ஏரணியு முல்லைவனத் திற்பரவுஞ் சுத்தபரி
பூரணியுன் னுள்ளுவந்திப் போது. (௧௧)

போதம் புளான்கணிக் காளாகி மாழ்கிப் புவியுழிவீண்
வாதம் புலம்பிமெய் வாளுட் சழிக்கு மதியிலிகாள்
வேதம் புகலுந் திருக்கரு காபுரி மேவியுமை
பாதம் புகழ்மினும் மேதங்க ணீங்கிமெய்ப் பண்புறுமே. (௧௨)

பண்கொண்டு பாவலர்கள் பாடித் தினம்பரவுந்
திண்கொண்ட முல்லைவனத் தேவியே—கண்கொண்டு
பார்த்தடியேற் பற்றிவரும் பண்டைவினைப் பற்றனைத்துந்
தீர்த்தருள்வ துன்றன் செயல். (௧௩)

செயங்காட்டு முல்லையங் காட்டம்மை தாட்டரிசிக்கிநெஞ்சே
பயங்காட்டி யள்ளற் பதிகாட்டுங் கூற்றனம் பாற்குறுகா
நயங்காட்டி யன்பரினங்காட்டித் தூயமெஞ் ஞானசுகோ
தயங்காட்டி முத்தித் தலங்காட்டு நிற்கினித் தாபமென்னே. ()

என்முகம்பார்த் தோர்வாக் கியம்பா யழுங்குழவி
யின்முகம்பார்த் தோம்பா திருப்பளோ—பொன்முகநேர்
தென்மலியேற் றஞ்சார் திருக்கருகா வூர்மருவும்
நின்மலியே யித்தருண நீ. (௧௫)

தருணத்தரும்புறழ் தந்தமின் னார்மயற் சாடியதா
தருணத்தரும்பு கனியே யதிதி தவத்துதிமைந்
தருணத்தரும்புத் தமுதன்ன வாக்குரந் தாபுவிக்கர்த்
தருணத்தரும்புகழ் செய்கரு காபுரஞ் சாருமையே. (௧௬)

மைப்போது முல்லைவன மாதங்கி மாதுமையாள்
மெய்ப்போது தாளை வியந்துருகா—வெப்போதும்
வீண்போதென் றுள்கா விரகில்லீர் வெய்யநமற்
காண்போதென் செய்வீர் கலுழ்ந்து. (௧௭)

கல்லாற் புடைத்தொரு காலா லுதைத்திரு கைப்பிடிநீள்
வில்லாற் புடைத்துநின் றோர்க்குநின் னாயகன் வீடளித்தான்
மல்லாற் புடைமுல்லை மாவனத் தேவிநின் மாண்பினையான்
சொல்லாற் புகழ்ந்துநீ சும்மா விருந்திடிற் றோற்புனக்கே. (௧௮)

தோற்றங்க ளேழ்வகையுட் டோய்ந்தோய்ந் திவர்ந்துநினைப்
போற்றங்க மெய்ந்துமவம் போகாமுன்—னாற்றங்கொண்
மந்திபடு முல்லை வனத்துமையே நின்னினைவெற்
கந்திபக னீங்கா தருள். (௧௯)

அந்தித் தபன னிகர்மேனி யானுட் ஞன்பரிமேற்
கந்தித்த விக்கனை யாளைத் திருக்கரு காபுரிக்கண்
சந்தித் தனுதின மூலாக் கரமொடைந் தக்கரத்தைச்
சிந்தித்த பேர்க ளழியாத் திருவருட் சீரியரோ. (௨௦)

இரட்டைமணிமாலை முற்றிற்று.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௪ | ௫ | கருதலா | கருதலர் |
| ௬ | ௨௨ | மேனுநா | மேனுநா |
| ௭ | ௪௰ | சென்னலு | செந்நெலு |
| ௬. | ௨௯ | ணின்றுரு | ணின்றுரு |
| ௮ | ௩ | கையினுன் | கையினுண் |
| ௰ | ௧௮ | யென்னுள்வீட் | யெந்நாள்வீட் |
| ௧௪ | ௧௰ | நினைந்தாரு | நனைந்தாரு |